பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

19 10 2024 6 30
சனிக்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உத்திரபிரதேச மாநிலம் வாரணாசியில் ஆறாயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் திரு நரேந்திரமோடி நாளை தொடங்கி வைக்கிறார்.
2. பாதுகாப்புத்துறையில் நவீன தொழில்நுட்பங்களை கொண்டு வருவதற்கான முயற்சிகளை மத்திய அரசு எடுத்து வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்,
3. தென்மாநிலங்களுக்கு இடையேயான குற்றச்செயல்களை தடுக்க ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென்று தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்
4. தமிழகத்தில் கரும்பு விவசாயிகளுக்கு 247 கோடி ரூபாய் சிறப்பு ஊக்கத் தொகை வழங்க மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.
5. நியுசிலாந்து அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நான்காவது நாளான இன்று இந்தியா இரண்டாவது இன்னிங்ஸில் 462 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடி நாளை தமது சொந்த தொகுதியான உத்திரபிரதேச மாநிலம் வாரணாசிக்கு செல்கிறார்.

அங்கு சுமார் ஆறாயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும் தொடங்கி வைத்து உரையாற்றவுள்ளார்.

பொதுமக்களிடையே பிரதமர் உரையாற்றும் கூட்டத்திற்கு பல அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

வாரணாசி காவல்துறை ஆணையர் திரு மோஹித் அகர்வால் செய்தியாளர்களிடம் பேசுகையில், ட்ரோன் மூலம் கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறினார்.

வாரணாசி தொகுதியில் 380 கோடி ரூபாய் மதிப்பிலான நிறைவுற்ற திட்டங்களை தொடங்கி வைக்கும் பிரதமர், இரண்டாயிரத்து 874 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டுகிறார்.

சுகாதாரம், கல்வி, சுற்றுலா, வேலைவாய்ப்பு, விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் கொண்டுவரப்பட்டுள்ள புதிய திட்டங்களையும் பிரதமர் தொடங்கி வைக்கிறார்.

வாரணாசி விமான நிலையத்தில் புதிய முனையம் அமைப்பதற்கான அடிக்கல்லையும் திரு நரேந்திரமோடி நாட்டவுள்ளார்.

**Sigara** விளையாட்டரங்கில் 20 ஆயிரம் மக்களிடையே பிரதமர் கலந்துரையாடவுள்ளார்.

[]<<<>>>[]

பாதுகாப்புத்துறையில் நவீன தொழில்நுட்பங்களை கொண்டு வந்து வலுவான பாதுகாப்பு கட்டமைப்பை உருவாக்குவதற்கான முயற்சிகளை மத்திய அரசு எடுத்து வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்,

புதுதில்லியில் இன்று தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் 62-வது பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், நாட்டின் முப்படைகளும் எந்த ஒரு சூழ்நிலையையும் எதிர்கொள்வதற்கு தயார் நிலையில் இருப்பதாகக் கூறினார்.

தற்போதைய சூழ்நிலையில் முறையான போர் முறைகளை சில நாடுகள் மீறி செயல்படுவது பாதுகாப்புக்கு பெரும் சவாலாக உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

தரை, கடல் மற்றும் வான்வெளி தாக்குதல் மட்டுமன்றி இணையதள மோசடி, விண்வெளி தாக்குதல், தவறான தகவல்களை பரப்புவது உள்ளிட்ட முறைகேடான நடவடிக்கைகளை சிலர் பின்பற்றுவதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

ராணுவ செயல்பாடுகளை கட்டமைக்க செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டுமென்றும், முறைகேடுகளை கண்காணிக்க இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

ராணுவ கட்டமைப்புகளில் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தன்னிச்சையாக முடிவுகளை எடுப்பதற்கும் இந்த தொழில்நுட்பம் பேறுதவியாக இருக்கும் என்றும் அவர் கூறினார்,

உலகளாவிய அரசியல் தொடர்புகள், சர்வதேச உறவுகள் மற்றும் பாதுகாப்பு கூட்டு முயற்சிகள் ஆகியவற்றால் இணையதள மோசடிகள் போன்ற குற்றங்களை திறம்பட தடுக்க முடியும் என்றும் திரு ராஜ்நாத்சிங் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தின் 14-வது பட்டமளிப்பு விழா இன்று தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி தலைமையில் நடைபெற்றது.

இதில் 656 மாணவ மாணவியர் பட்டம் பெற்றனர்.

சிறந்த மதிப்பெண்கள் பெற்ற எட்டு மாணவ மாணவியருக்கு பட்டமளிப்பு விழாவில் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது.

**[]<<<>>>[]**

போதைப்பொருள் குற்றவாளிகள் மற்றும் இணையதளம் வாயிலாக வதந்திகளை வெளியிடுவோர் மீது நடவடிக்கை எடுக்க தென்மாநில காவல்துறையினர் ஒருங்கிணைந்து

செயல்பட வேண்டுமென்று தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற தென்மாநில காவல்துறை இயக்குநர்கள் ஒருங்கிணைப்பு மாநாட்டில் உரையாற்றிய அவர், போதைப்பொருட்கள், தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள், மாநிலங்களுக்கு இடையேயான குற்ற செயல்கள், இணையவழி குற்றங்கள் போன்ற தீவிர குற்ற சம்பவங்களிலிருந்து தென்மாநில மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டுமென்று வலியுறுத்தினார்.

போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்த கடுமையான அபராதம், சிறை தண்டனை உள்ளிட்ட சட்ட ரீதியிலான நடவடிக்கைகள் மட்டுமன்றி, மாணவர்களிடையே போதைப்பொருட்களின் தீமைகள் குறித்த பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டுமென்று அவர் கூறினார்.

கல்வி நிறுவனங்கள் அருகில் போதைப்பொருள் விற்பனையை தடுக்க காவல்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவர் அறிவுறுத்தினார்.

தமிழகத்தைப் போதைப்பொருட்கள் இல்லாத மாநிலமாக உருவாக்கும் முயற்சியில் மாநில அரசு ஈடுபட்டுள்ளதாகவும் திரு மு க ஸ்டாலின் தெரிவித்தார்.

*<u>( சவுண்ட்பைட் - மு க ஸ்டாலின் ) --45-- செகண்ட்</u>*

**[]<<<>>>[]**

தமிழகத்தில் நடப்பு ஆண்டு கரும்பு அரவை பருபவத்திற்கு சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு 247 கோடி ரூபாய் சிறப்பு ஊக்கத் தொகை வழங்க மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக மாநில அரசு இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மாநில வேளாண் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டபடி இந்த ஊக்கத்தொகை வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இயங்கி வரும் இரண்டு பொதுத்துறை, 12 கூட்டுறவு மற்றும் 16 சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய விவசாயிகள் ஒரு டன்னுக்கு மூவாயிரத்து 134 ரூபாய் 75 பைசா பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பினால் தமிழகத்தில் உள்ள ஒரு லட்சத்து 20 ஆயிரம் கரும்பு விவசாயிகள் பயன்பெறுவார்கள் என்று அந்த செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**[]<<<>>>[]**

தென் தமிழகத்தின் வளர்ச்சிக்காக பல முதலீட்டு திட்டங்களை மாநில அரசு கொண்டு வந்துள்ளதாக தொழில்துறை அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி – திருச்செந்தூர் சாலையில் அமைக்கப்பட்டுள்ள டைடல் நியோ பார்க் கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் தொழில் வளர்ச்சி பரவலாக அமைய வேண்டும் என்ற நோக்கில் மாநில அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகக் கூறினார்.

தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளும் மேம்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

குழந்தைகளின் மேம்பாட்டிற்காக மாநில அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்து வருவதாக சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் அரசு மற்றும் உதவிபெறும் குழந்தைகள் இல்ல குழந்தைகளுக்கான மண்டல அளவிலான விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகளை அவர் இன்று தொடங்கி வைத்தார்.

அனைத்து குழந்தைகளுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற நோக்கில் அரசு செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

தூத்துக்குடி மாவட்டம் தட்டப்பாறையில் உள்ள அரசு கூர்நோக்கு இல்லம் ஆறு கோடி ரூபாய் மதிப்பில் மேம்படுத்தப்பட உள்ளதாக அமைச்சர் கூறினார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் தீபாவளி பண்டிகைக்கு மறுநாளான நவம்பர் ஒன்றாம் தேதி அரசு விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தீபாவளி பண்டிகைக்காக சொந்த ஊர்களுக்குச் சென்று திரும்பும் மாணவர்கள், அவர்களது பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்களின் நலனை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த விடுமுறையை ஈடுசெய்யும் வகையில், அடுத்த மாதம் ஒன்பதாம் தேதி பணிநாளாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி நகராட்சி நல்லாங்குளம் பகுதியில் தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை துறை சார்பில் தீயணைப்புத் துறையினர் பேரிடர் காலங்களில் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒத்திகை நிகழ்ச்சி நடத்தினர்.

**[]<<<>>>[]**

மயிலாடுதுறையில் தீபாவளி பண்டிகையையொட்டி கூட்டுறவு விற்பனை பண்டகசாலையில் பட்டாசு விற்பனையை ஆட்சியர் மகாபாரதி இன்று தொடங்கி வைத்தார்.

**[]<<<>>>[]**

தூத்துக்குடி மாநகராட்சியில் பிளாஸ்டிக் பைகள் உபயோகிப்பதை தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்படும் என்று மேயர் திரு ஜெகன் பெரியசாமி தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

நீலகிரி மாவட்டம் மசினக்குடி காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட கக்கனல்லா முதல் தெப்பக்காடு வரை நக்ஸல் தடுப்பு பிரிவினருடன் இணைந்து மேற்கு மண்டல காவல்துறை தலைவர் திரு செந்தில்குமார் இன்று சோதனை நடத்தினார்.

**[]<<<>>>[]**

தருமபுரி மாவட்டத்தில் வத்தல்மலை, முத்தம்பட்டி, சித்தேரி மலை உள்ளிட்ட மலைப்பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக அப்பகுதிகளில் உள்ள காட்டாறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

நியுசிலாந்து அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நான்காவது நாளான இன்று இந்தியா தனது இரண்டாவது இன்னிங்ஸில் 462 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

பெங்களூருவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் நியுசிலாந்து வெற்றிபெற 107 ரன் எடுக்க வேண்டும் என்ற வெற்றி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நியூஸிலாந்து முதல் இன்னிங்ஸில் 402 ரன்னும், இந்தியா முதல் இன்னிங்ஸில் 46 ரன்னும் எடுத்தன.

**[]<<<>>>[]**

ஜோஹர் கோப்பைக்கான ஜூனியர் ஹாக்கிப் போட்டி மலேசியாவில் இன்று தொடங்கியது.

இந்தியா முதல் போட்டியில் நான்குக்கு - இரண்டு என்ற கோல் கணக்கில் ஜப்பானை வென்றது.

**[]<<<>>>[]**

அல்மாட்டி ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜூன் கதே – ரித்விக் இணை இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

கஜகஸ்தானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் இந்த இணை 7-6, 6-3 என்ற செட் கணக்கில் ஜெர்மனி இணையை வென்றது.

***End of News***